பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 13 ஞாயிற்றுக்கிழமை 26.05.2024 கதிர் 200

## ஆளும்தரப்பு திட்ட முன்னெடுப்பில் வன்னிக்கு மிகப் பெரிய வகிபாகம்

### ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

தற்போது ஆளும் தரப்பு முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தில் வன்னிக்கு மிகப் பெரிய வகிபாகம் இருக்கிறது என்று கிளிநொச்சியில் வைத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது கருதிட்டத்தின் பேரில் நடைமுறைப்படுத்தப் படும் சிக்கலற்ற வகையில் முழுகாணி உரிமையை அனைவருக்கும் வழங்கும் 'உறுமய' வேலைத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு 'நெலும் பியச' மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய 1700 முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், அடையாள ரீதியாக சில உறுதிப் பத்திரங்கள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்ததாவது:

கிளிநொச்சி நகரம் துரிதமாக வளர்ந்து வருகிறது. மாகாண சபைகளின் கலாசார பிரிவுகளுடன் கலந்துரையாடி ☞ 8

## இன, மத அவநம்பிக்கைகளை போக்க தேர்தலுக்கு முன் நடவடிக்கை அவசியம்

### கரு ஜெயசூரிய அறிக்கை

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக நிலவும் இன மற்றும் மத அவநம்பிக்கையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற தலைப்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞ 8

## 47 ஆண்டுகளாக அரசியல் செய்பவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியவில்லை

### ஆனாலும் மீண்டும் அதிகாரத்துக்கு ஆசைப்படுகிறார் என ரணில் மீது ஜே.வி.பி. தலைவர் கடும் விளாசல்

ரணில் இன்றா நேற்றா 47 ஆண்டுகளாக உள்ளார். அமைச்சராக இருந்தார். பிரதமராக இருந்தார். நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கலாம் அல்லவா? அவரால் முடியவில்லை. இருப்பினும் தற்போது அதிகாரத்துக்கு வருவதற்கு மீண்டும் முயற்சிக்கின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட பெண்கள் மாநாடு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் பரப்பைப் பொறுத்தவரையில் கடந்த இரு நாள்களில் இரு முக்கிய நிகழ்வுகள் கட்டவிழ்ந்தன. அவற்றைப் பற்றித்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதே பரவாயில்லை என்று தமிழ் பொது வேட்பாளர் தெரிவை வலியுறுத்தும் 'கூட்டிணைவு' ஆட்கள் தீர்மானித்து விட்டார்கள் போலுள்ளது. அதனால் தமிழ் அரசுக் கட்சிக்குள் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா, தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன் எல்லோரையும் விட்டுவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் நேரடியாகச் சென்றுவிட்டார்கள் அவர்கள்.

'கூட்டிணைவு'காரர்களின் கருத்துப்படி அவர்களின் முயற்சி குறித்த 'சதிக் கோட்பாட்டை', குற்றச்சாட்டை அரசியல் பரப்பில் துணிந்து பகிரங்கமாகப் போட்டுடைத்தவர் சுமந்திரன். இந்த முயற்சி ராஜபக்சக்களுக்கு ஆதரவான ஒன்று, இதனால் ☞ 2

## ஒரு தேசத்தையே நம்புகின்றோம்

### நாமல் மட்டக்களப்பில் தெரிவிப்பு

நாம் ஒரு தேசத்தையே நம்புகின்றோம் அங்கு தமிழர் சிங்களவர் மலேயர், பறங்கியர் என்ற பேதங்களை நாம் பார்க்கவில்லை என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களுடனான மக்கள் சந்திப்பொன்று நேற்றைய தினம் மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது. அதன் பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. இம்முறை அவ்வாறு நடக்காமல், அறிவுப்பூர்வமான தீர்மானத்தை தமிழ் மக்கள் மேற்கொள்ளவேண்டும்.

வரலாற்றை எடுத்துப்பார்த்தால் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்படவில்லை. தமிழ் மக்களின் வாக்குகள் எமக்கு ☞ 8

## 10 வயதுக்கு உட்பட்ட

# 60 சதவீதமான சிறுவர்கள் கைப்பேசிகளுக்கு அடிமை

### புதிய ஆய்வில் தகவல்

**இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதமானோர் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**

**தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள்** ☞ 2

## கிளிநொச்சியில் 1000 குடும்பங்கள் குடியிருப்பதற்கு காணிகள் தேவை

### ஜனாதிபதி முன்பாக வட மாகாண ஆளுநர் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்தில் காணியே இல்லாமல் ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. அதற்கு மேலாக 21 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு காணி உரித்து வழங்கப்பட வேண்டியுள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ல்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் காணி உரிமையை அனைவருக்கும் வழங்கும் 'உறுமய' வேலைத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றபோது அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணிப் பிரச்சினைகளுக்காகவே மக்கள் அதிகமாக அரச அலுவலகங்களுக்கு வருகின்றனர். காணி பிரச்சினைகளுக் ☞ 8

## பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஆளும் தரப்பிடம் திட்டம் எதுவுமில்லை

### அதனால் இஷ்டம்போல் வரி விதிக்கின்றனர் என்கிறார் சஜித்

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஆளும் தரப்பிடம் எந்தத் திட்டமும் இல்லை. இதனால்தான் இஷ்டம்போல் வரிக்கு மேல் வரி விதித்து வருகின்றனர். என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 199 ஆவது ☞ 2

## பெண்கள் அச்சமின்றி வாழக்கூடிய நிலையை ரணில் உருவாக்குவார்

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா புழகாங்கிதம்

அச்சமின்றி பெண்கள் எல்லா இடங்களுக்கும் செல்லக்கூடிய நிலையை ஜனாதிபதி உருவாக்குவார் என்ற நம்பிக்கை உள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் காணி உரிமையை அனைவருக்கும் வழங்கும் 'உறுமய' வேலைத் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு 'நெலும் பியச' மண்டபத்தில் ☞ 8

## பெண் வலுவூட்டலுக்காக தனியான ஆணைக்குழு

### கிளிநொச்சியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

சட்டத்தின் மூலம் பெண்களை வலுவூட்டத் தேவையான நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த தனியான ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் 5,320 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த மகளிர் சுகாதார நிலையம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும் கொரோனா தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக மகளிர் ☞ 2

## சட்டமா அதிபரின் பதவிக் காலத்தை நீடிக்கப் பரிந்துரை

தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக்காலத்தை இந்த வருடம் டிசம்பர் இறுதிவரை நீடிக்குமாறு ஜனாதிபதி ரணில் பரிந்துரைத்துள்ளார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புச் சபைக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக அறிய முடிகிறது. சட்ட மா அதிபரின் பதவிக் காலம் ஜூன் 27ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஜூன் மாதம் அரசமைப்பு பேரவை கூடும் திகதி தொடர்பில் அரசியலமைப்பு சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனவும், எனினும் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்பு தொடர்பான யோசனை சபாநாயகருக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்ப்பாரென நம்புகிறோம்

### சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு

வடக்கு மக்களின் ஏனைய பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வுகள் கிடைக்கவேண்டும். அதற்காக ஜனாதிபதி விக்கிரமசிங்க தொடர்ந்து நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அனைவருக்கும் காணி உறுதிகளை வழங்கும் 'உறுமய' வேலைத்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு 'நெலும் பியச' மண்டபத்தில் இடம்பெற்றபோது அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சிங்களவர்களின் இனஉணர்ச்சி தட்டியெழுப்பப்படும் வாய்ப்புண்டு என்றெல்லாம் போட்டுத் தாக்கியவர். இருந்தாலும் 'கூட்டிணைவு'காரர்களுக்கு இப்போதைக்கு இந்த விடயத்தை அரசியல்கட்சிகளுடன் இணைந்து வெற்றிகரமான ஒப்பேற்ற வேண்டுமனால் சுமந்திரனின் ஆதரவைப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்துவிட்டார்களோ தெரியவில்லை.

ஏனெனில் தமது, தமிழ்ப் பொதுவேட்பாளர் முடிவு குறித்து அரசியல் கட்சிகளுடன் பேசுவதாகத்தான் அவர்கள் முடிவு செய்திருந்தார்கள். அப்படியிருந்தும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒவ்வொன்றுடனும் பேசுவதற்குப் பதில் அந்தக் கூட்டணியின் தலைவர்கள் அனைவருடனும்ஒட்டுமொத்தமாகப் பேசியிருந்தார்கள். இப்போது தமிழ் அரசுக் கட்சிக்குள் ஒவ்வொரு தலைவர்களுடனும் தனித்தனியே பேசத் தொடங்கியிருக்கிறார்கள். இதுவென்ன இராஜதந்திரம் என்பதையும் ஏதாவது கோட்பாடுகள் ஊடாக அவர்கள்தான் வெளிப்படுத்தவேண்டும். தமிழ் அரசுக்கட்சிஏற்கனவேஒருகட்சியாக இது விடயத்தில் உடனடியாக முடிவு எதனையும் எடுப்பதில்லை என்று தீர்மானித்திருக்கிறது. கட்சியை வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்றால்சுமந்திரனைத்தான்முதலில் வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்று 'கூட்டிணைவு'க்காரர்கள் நினைத்துவிட்டார்கள் போலும். சரி, அதை ஒ-ருபுறம் வைத்துவிட்டு, அவர்களின் சுமந்திரனுடனான சந்திப்புக் குறித்துப் பார்க்கலாம்.

நேற்றைய சந்திப்பில் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் பொதுவெளியில் பகிரங்கமாக கலந்துரையாடுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

உரும்பிராய் சிவகுமாரன் உருவச்சிலைக்கு அருகில் உள்ள கூட்டுறவு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது சிவில் சமூகப்பிரதிநிதிகள்குழுவின்சார்பில் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் பத்தி எழுத்தாளர்களான நிலாந்தன், யோதிலிங்கம், ரவீந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

சந்திப்பில் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியம் பற்றி சுமந்திரன் கேள்விகளைத் தொடுத்திருந்தார். வழமையாகபொதுவேட்பாளர்என்ற விடயத்தினை பின்பற்றுவதில்லை. சம்பிரதாயரீதியாக தென்னிலங்கை தலைமைகளுடன் பேரம் பேசியே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. தற்போதைய தருணத்தில் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டு பின்னடைவுகள் ஏற்பட்டால் அது பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும். அவ்வாறிருக்கையில் எதற்காக தற்போது பொதுவேட்பாளரை இந்த தருணத்தில் நிறுத்தவேண்டும் என்பது எடுத்த எடுப்பிலேயே அவரது கேள்வியாக இருந்தது.

அதற்குப் பதிலளித்த சிவில் பிரதிநிதிகள் குழுவினர், வழக்கம்போல தமிழ் மக்களின் வாக்குகள் இந்தமுறை தேர்தலில் சிதறப்போகின்றன. இதனால் தமிழ் மக்களின் கூட்டுப்பலம் மலினப்படுத்தப்படும் என்ற தொனிப்பட கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

அதேநேரம், பொதுவேட்பாளர் விடயம்தோல்விகண்டால்ஏற்படும் ஆபத்துக்களைப் பட்டியலிட்ட சுமந்திரன் தற்போதைய நிலையில் எதற்காக ஆபத்தான பரீட்சிப்புக்களைச்செய்யவேண்டும் என்று கேட்டுள்ளார்.

பொதுவேட்பாளர் விடயம் என்பது ஆபத்தான பரீட்சிப்பாகவே இருக்கப்போகின்றது என்பதை ஏற்றுக்கொண்ட 'கூட்டிணைவு'க்காரர்கள் தென்னிலங்கை வேட்பாளர்களாக வர இருப்பவர்கள் தமிழர்கள்விடயங்களைகவனத்தில் கொள்ளவில்லை, ஆகவே தமிழர்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக அவர்களை தமிழர்கள் நோக்க வரவழைக்க முடியும் என்று சப்பைகட்டுக் கட்டியுள்ளனர். அத்தோடு இதனையொரு பொதுவாக்கெடுப்பாகக் கருதவேண்டும்என்றவிடயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தக் கருத்தைச் சுமந்திரன் அடியோடு மறுத்துவிட்டார். பொதுவாக்கெடுப்பாக ஜனாதிபதி தேர்தலைக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டதோடு 1977இல் காணப்பட்ட நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் தற்போதைய நிலைமைகள் கணிசமாக மாறியுள்ளன என்பதையும் புள்ளிவிவரங்களுடன்கூறியுள்ளார்.

இதனையடுத்துபொதுவேட்பாளர் விடயம் சம்பந்தமாக, இப்படி இரகசியப் பேரம் பேசல்களில் ஈடுபடுவதைவிடுத்து, பொதுவெளியில் பகிரங்கமான கலந்துரையாடல்களைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்ற யோசனையை சுமந்திரன் முன்வைக்கவும் அதனை 'கூட்டிணைவு'க்காரர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதுஎப்போது, எங்கு, எப்படிநடக்கும் என்றெல்லாம் ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அப்படியொரு சம்பவம் நடந்தால் அப்போது அது குறித்தும் விரிவாகப் பார்க்கலாம்.

இதற்கிடையில் இருநாள் விடுமுறையில் வடக்குக்கு வந்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.கே.விக்னேஸ்வரனை அவரது யாழ்ப்பாணத்து வதிவிடத்திற்குச் சென்று சந்தித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை அடையாளம் காண்பதற்கு உங்களால் முடியுமா என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனிடத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

சி.வி.விக்னேஸ்வரன் அண்மைய நாட்களில் உடல் நலக்குறைவடைந்திருந்தமையை கேள்வியுற்று, அவரைப் பார்வையிடுவதற்காகவே ஜனாதிபதி அவரது இருப்பிடத்திற்குச் சென்றார் என்று ஜனாதிபதி தரப்பில் தெரியப்படுத்தப்பட்டது. வழக்கமான உடல்நல விசாரிப்புக்களுக்குப் பின்னர் உரையாடல் அரசியல் பக்கமும் திரும்பியது.

இருவருக்கும் இடையிலான தனிப்பட்ட அந்த உரையாடல் குறித்து விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தலைமையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி சார்ந்த செயற்றிட்டங்கள் தொடர்பில் தெரிவித்தார.

அத்தோடு ஜனாதிபதி தேர்தலே அடுத்து நடைபெறவிருப்பதாகவும் அதனையடுத்து குறுகிய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலும் பின்னர் மாகாணசபைகளுக்கானதேர்தலும் நடத்தப்படவுள்ளதாகவும் கூறினார்.

தொடர்ந்து மத்திய ஆளும் தரப்பும், மாகாண ஆளும் தரப்பும் கூட்டிணைந்து புரட்சிகரமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரநிலைமைகளை மீளக் கட்டியெழுப்ப முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அச்சமயத்தில் நான் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பகிரப்படாதுள்ளமையை சுட்டிக்காட்டியதோடு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்குவதாக மே தின உரையில் கூறியுள்ளார், ஆனால் நீங்கள் (ஜனாதிபதி ரணில்) பொலிஸ் அதிகாரமற்ற மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் தொடர்பிலேயே பேசுகின்றீர்கள் என்று குறிப்பிட்டேன்.

அச்சமயத்தில் ஜனாதிபதி ரணில், சஜித் பிரேமதாச 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவாரா என்பதை மீளவும் கேட்டு உறுதி செய்துகொள்ளுங்கள் என்று குறிப்பிட்டார்.

அதனையடுத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவது தொடர்பில் நாம் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்று குறிப்பிட்டேன்.

அப்போது ஜனாதிபதி ரணில் புன்னகையுடன் 'உங்களால் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை அடையாளம்காணமுடியுமா?'என்று கேள்வி எழுப்பினார். அதற்கு நான், பொதுவேட்பாளரை அடையாளம் காண்பதற்காகநாம்ஒருகுழுவினை நியமித்துள்ளோம். அந்தக்குழு நிச்சயமாக அடையாளம் காணும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதேநேரம், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் நாட்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமாக இருந்தால் இனங்களுக்கு இடையிலான தேசிய பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று வலியுறுத்தினேன்.

இருப்பினும், அவர் பொருளாதாரப்பிரச்சினைகளையே முன்னிலைப்படுத்தியதோடு அவற்றுக்கான தீர்வுகாணும் உபாயங்கள் சம்பந்தமாகவே குறிப்பிட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி, வடக்கில் உள்ள இளைஞர்கள், மூத்தவர்கள் போன்று சிந்திப்பதில்லை என்று ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டதோடு அவர்கள் தொழில்வாய்ப்புக்கள் உள்ளிட்டவற்றை எதிர்பார்த்து நிற்கின்றனர் என்றும் அதன் காரணத்தினாலேயே நாட்டை விட்டு வெளியேறும் நிலைமைகள் அதிகரிக்கின்றன என்றும் கூறினார்.

அத்துடன் பொதுவேட்பாளர் தொடர்பிலும் இளையோர் மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கலாம்என்றதொனிப்பட கருத்துக்களை வெளிப்படுத்தினார் எனவும் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 60 சதவீதமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சிகரமான விவரம் தெரியவந்தது என்று விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்தார்.

கைப்பேசிப் பயன்பாட்டுக்கு அடிமையானவர்களில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருக்கின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச்சிறுவர்கள்தங்கள்கல்வி நடவடிக்கையைச் சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவைத்தியநிபுணர்தெரிவித்தனர்.

கையடக்கத் தொலைபேசிகளுக்குஅடிமையானசிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது.

அவர்கள்வன்முறையில்ஈடுபடும் வகையில் நடந்து கொள்கின்றனர் எனவும், பெற்றோரால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

அவசியமாக இருந்தால் மட்டும் எந்தவொரு சிறுவர்களையும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கும் குறைவாக கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறு பெற்றோரிடம் மருத்துவர்கள் கேட்டுக்கொண்

## பொருளாதாரத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமாக 1,177,000 ரூபாய் பெறுமதியான ஸ்மாரட் வகுப்பறை உபகரணங்களை அனுராதபுரம், கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த பொருளாதார வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்கிய ஒன்றாக அமைந்திருக்கவேண்டும். ஆனால் வங்குரோத்தான நாட்டில் தற்போது நட்புவட்டார முதலாளித்துவம் செயல்பட்டு வருகிறது. இலஞ்சம், ஊழல், கொமிஸ்போன்றவைவழங்கப்பட்டு வருகின்றது. இந்தமுறைஒழிக்கப்பட வேண்டும்

தற்போது உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் நாட்டின் வருமானத்திற்கும் கூட வரி விதிக்கப்பட்டு வருகிறது. பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புக்கு மட்டுமே தற்போது வரி விதிக்காதுள்ளனர். இவ்வாறான வரிகளை விதிப்பதற்கு பதிலாக மாற்று வழிகள் பல இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு ஆளும் தரப்பிடம் எந்தத் திட்டமும் இல்லை. இதனால்தான் அவர்கள் வரிக்கு மேல் வரி விதித்து வருகின்றனர். பொருளாதாரத்தை சுருக்கும் வேலைத்திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய சுருங்கிய பொருளாதார கொள்கை முன்னெடுக்கப்பட்டு வருவதால் வறையறுக்கப்பட்ட வருமானத்தையே ஈட்டி வருகின்றனர். இதுபோதாமையினால் நாட்டின் வருமானத்தை ஈடுகட்ட இஷ்டம் போல வரி விதித்து வருகின்றனர்.

நாட்டில் இடம்பெற்று வரும் திருட்டு, ஊழல், மோசடி, சுரண்டல்களுக்கு புறம்பாக இந்த பிரபஞ்சம் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனால் இதற்கு அனுசரணை வழங்க பெருமளவிலான நன்கொடையாளர்கள் தயாராக உள்ளனர். இங்கு 10 சதவீதம் முதல், 20 சதவீதம் தரகுப்பணம் கோரப்படுவதில்லை. வெளிப்பழத்தன்மையோடு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனால், சாதி, மதம், வர்க்கம், கட்சி வேறுபாடுகள் இன்றி, பெரும்பான்மையினர் இத்திட்டத்தை பாராட்டினாலும், சிறு தரப்பினர், வாய்ச் சொல் தலைவர்கள் இதனை விமர்சித்து வருகின்றனர். விமர்சிக்கும் தரப்பினர் தமது கூட்டங்களுக்கு செலவழிக்கும் கோடிக்கணக்கான பணத்தை பாடசாலைகளுக்கு வழங்கினால் இது மேலும் பயனுள்ளதாக அமையும். ஆனால் அவர்கள் இவ்வாறான பயனுள்ள செயல்பாடுகளை முன்னெடுப்பதை விடுத்து இலவச கல்வியை மேலும் பின்னோக்கி கொண்டு செல்லும் விதமாக நடந்து வருகின்றனர் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மண்ணில் பிறந்த மக்களுக்கு காணி உரிமை கிடைக்க வேண்டும் என்று இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வந்தோம். போர்க் காலத்தில் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட காணிகளைமக்களுக்குமீளவழங்க வேண்டும்என்றகோரிக்கையையும் முன்வைத்து வருகிறோம்.

ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் இந்தக் காணிகளை விடுக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறார். இந்தப் பணிகளில் ஜனாதிபதி சில இடங்களில் இடையூறுகளைச் சந்தித்துள்ளார். எனினும், மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் ஜனாதிபதி இந்த பணிகளை முன்னெடுத்து வருகிறார்.

வடக்கில் உள்ள ஏனைய பிரச்சினைகளுக்கும்ஜனாதிபதிதீர்வு கண்டுவருகிறார். அரசியல்கைதிகள் விடுக்கப்பட்டுள்ளனர். இன்னமும் 12 அரசியல் கைதிகள் மாத்திரமே இருக்கிறார்கள். அவர்களையும் விடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காணாமல்போனவர்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். காணாமல்போனவர்கள்தொடர்ந்து போராடி வருகிறார்கள். தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய போராடி வருகிறார்கள். இதற்கும் தீர்வு காண்பதில் ஜனாதிபதி ஆர்வமாக இருக்கிறார்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் நிச்சயமாகத் தீர்க்கப்படவேண்டும். இதற்காக ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். வடக்கு மக்களின் ஏனைய பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வுகள் கிடைக்கவேண்டும். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி தொடர்ந்து நடவடிக்கை எடுப்பார்என்றநம்பிக்கைஇருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## 47 ஆண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா நடைபெறாதா என்று எதனையும் பற்றிச் சிந்திக்க வேண்டாம். தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறாது மீண்டும் ரணிலிடம் அதிகாரத்தினை வழங்க வேண்டும் என்று ரங்கே பண்டார கூறியதைஎன்னால்பார்க்கமுடிந்தது. அதேபோன்று ரணிலையே தேசிய வேட்பாளராக்குவோம் என்று வஜிர அபேவர்த்தன கூறியதும் எனக்கு நினைவில் உள்ளது.

அவர்களது கூற்றுக்கள் அவர்களால் மீண்டும் தேர்தலில் வெற்றிபெறமுடியாது என்பதையே காண்பிக்கின்றன. இதனால் தற்போது 10 கிலோ கிராம் அரிசியை வழங்குகின்றனர். அரிசிக்காக மக்கள் வாக்களிப்பார்கள் என்று இவர்கள் நினைக்கின்றனர்.

உண்மையில் சீனி வரி மோசடியில் பெற்றுக்கொண்ட 1500 கோடி ரூபாவையும் அரசிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 600 கோடி ரூபாவையும் சேர்த்து 25 கிலோஅரசியையும்வழங்குவார்கள். டிசெம்பர் மாதமாகின்றபோது அரிசி வழங்கல் நின்றுவிடும். அஸ்வெசும திட்டமும் நின்றுவிடும். வெறுமனே தேர்தலுக்கான செயற்பாடுகளே இவையாகும்.

மக்களின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிந்து இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மக்களின் உண்மையான பிரச்சினையைப்பார்த்தால்நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கமுடியும். ரணில் இன்றா நேற்றா 47 ஆண்டுகளாக உள்ளார். அமைச்சராக இருந்தார். பிரதமராக இருந்தார் நாட்டைக் கட்டியெழுப்பியிருக்கலாம்அல்லவா? அவரால் முடியவில்லை. தற்போது அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்றார்.

## பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகளுக்கான இந்த சிறப்பு மையத்தின் பணிகளை முடிக்க முடியவில்லை.

ஆனால் தற்போது அதை வெற்றிகரமாகமுடித்துபெண்களுக்கு வழங்கியதில்மகிழ்ச்சிஅடைகிறேன். கிளிநொச்சி நகரில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயத்தை உருவாக்கி இந்தப் பிரதேசங்களைஅபிவிருத்திசெய்யத் திட்டமிட்டுள்ளோம்.

அத்துடன் இப்பிரதேசத்தில் வலுசக்தித் திட்டங்களை மீள உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சியில் இவ்வாறானசெயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் உள்ள காணிப்பிரச்சினைகள் மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

தற்போதுநிர்மாணிக்கப்பட்டுள்ள பெண்களின் சுகாதார சேவைகளுக்கான சிறந்த நிலையத்தை இந்நாட்டு பெண்களுக்காகச் செய்யப்படும் ஒரு சிறந்த பணியாக அறிமுகப்படுத்த முடியும். பெண்களுக்காக மேலும் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அதுமட்டுமல்ல இந்த ஜூன் மாத இறுதிக்குள் ஆண், பெண் சமூகத்தன்மை சட்டமூலம் நிறைவேற்றப்படும். இதற்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# ஆரோக்கியமான சமூகம் என்பது உள ஆரோக்கியமும் சேர்ந்ததே

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவிப்பு

(சர்ஜூன் லாபீர்)

ஆரோக்கியமான சமூகம் என்பது உடல் மற்றும் உள ஆரோக்கியம் சார்ந்ததாக இருக்க வேண்டும். என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

உளசமூக பிரச்சினைகளை குறைப்பதற்கான உளவியல் உளவளத்துனை செயலமர்வு கடந்த வாரம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பெண்கள் சார்ந்த சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

உடலளவில் நாங்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றோம் அதிலும் தொற்று நோய், தொற்றா நோய் என இரு வகை இருந்தாலும் பார்வையில் நாம் சந்தோசமாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது போல எல்லோருக்கும் காண்பிக்கின்றோம். ஆனால் உள்ளத்திற்குள் இருக்கின்ற பிரச்சினைகளை மறைத்துக் கொண்டு வாழ்வதால்தான் நாம் அதிகமான தொற்றா நோய்களுக்கு உள்ளாகின்றோம்.

உள்ளத்திற்குள்நிறையகவலைகளையும்,கஸ்டங்களையும் மறைத்துக்கொண்டு அதிகமான யோசனைகளோடு வாழ்கின்றதால்தான் உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, மனநல பாதிப்பு போன்ற பல நோய்கள் வருவதற்கு காரணமாக அமைகின்றது.

முறையான உணவுப் பழக்க வழக்கங்கள், முறையான வாழ்க்கை முறைகள் நம்மில் இல்லாததால் நாம் நோய்களை தேடிக்கொள்கின்றோம். இதற்காக அரசாங்கம் சுகாதார துறைக்கு அதிகளவிலான தொகையை செலுத்துகின்றது.அதேபோன்று எமது தனி நபர் வருமானத்திலும் அதிகமான தொகை ஆரோக்கியத்திற்காக செலவு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வாறு பொருளாதார ரீதியாக பல சிக்கல்களை ஏற்படுத்துவதோடு, சுகாதார சீர்கேடுகளையும் இவ் உளப் பாதிப்புக்கள் எமக்கு ஏற்படுத்துகின்றன.எனவே இவற்றை நாம் அடையாளம் காண வேண்டும்.

குறிப்பாகதங்களிடையேகாணப்படுகின்றபிரச்சினைகளை முதலில் இணங்காண வேண்டும். அதுபோல் சமூக மட்ட பிரதிநிதிகள், தலைவர்கள் குறித்த பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை இணங்கண்டு அவற்குக்கான தகுந்த தீர்வுகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

உளவளம்சார்ந்தபிரச்சினைகளைசமூகமட்டதலைவர்கள், பிரதி நிதிகள்முறையாக அனுகி அதனை குறுகிய, நீண்ட கால அடிப்படையில் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிந்து இருக்க வேண்டும்.

உள வள ஆலோசனைகளை சமூக மட்டத்திற்கு கொண்டு சென்று உள நோய்களை குறைத்து சமூக மேம்பாட்டுக்கும்,முன்னேற்றத்திற்கும்ஒத்துழைப்புவழங்குவது



சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கடமையாகும் என பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா,நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எல்.ஐ கபீர்,அம்பாறை மாவட்ட உளவள ஆலோசகர் மனூஸ் அபூவக்கர்,சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# மரங்கள் விழும் ஆபத்து இருந்தால் 117 இலக்கத்துக்கு அறிவிக்கவும்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கோரிக்கை



நாட்டில் எப்பிரதேசத்திலும் அனர்த்த நிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அதுதொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற துரித இலக்கத்துக்கு அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என அனர்த்த முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில்கலந்துகொண்டுகருத்துதெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சீரற்ற காலநிலை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு செய்கிறது. அதனால் வளிமண்டல திணைக்களத்தின் அறிவித்தல்களின் பிரகாரம்செயற்படுவது அனைவரதும் கடமை. அதனால் சீரற்றகாலநிலையால்ஏற்படும்அனர்த்தங்களில்இருந்து பாதுகாப்பு பெற வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவித்தல்களுக்கு கவனம்செலுத்துமாறு நாங்கள் நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் மரங்கள் முறிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. ஆனால் தொடர்பாக இதுவரை கவனம்செலுத்தப்பட்டிருப்பதாகதெரியவில்லை. மரங்கள் விழுவது தொடர்பாக எச்சரிக்கை விடுப்பதற்கென ஒரு நிறுவனம் எமது நாட்டில் செயற்படுவதில்லை. இவ்வாறான எச்சரிக்கை விடுக்கும் பொறுப்பை கட்டட ஆராய்ச்சிநிறுவனத்துக்குநாங்கள்வழங்கிஇருக்கிறோம். அந்த துறையை முன்னேற்ற வேண்டும். துறைசார் நிபுணர்களை இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று தேசிய கொள்கை அமைக்கவேண்டும். இதுதொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது.

அதேநேரம் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது, உள்ளூராட்சி நிறுவனங்களின்அனுமதி இல்லாமல்கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும். சட்டவிரோத கட்டிடங்களை நிறுத்துவதற்கு அனுமதியளிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதிப்பை மறைக்க வேண்டாம் என அந்த நிறுனங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் இரத்தினபுரி, மாத்தறை, காலி, கொழும்பு, களுத்துறை. கம்பஹா, அக்குரணை போன்ற பிரதேசங்கள் இனம் காணப்பட்டிருக்கின்றன. இதற்கு நடவடிக்கை எடுக்காமல், தொடர்ந்து நிவாரணம், நஷ்டயீடு என செய்துகொண்டிருக்க முடியாது.

எனவேநாட்டில்எப்பிரதேசத்திலும்அனர்த்தநிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அதுதொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117என்ற துரித இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும். அதேபோன்று கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலாளரை அறிவுறுத்த முடியும். - என்றார்.(05)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது மரம் முறிந்து விழுந்து மூவர் காயம்



மஹவெள, கொஸ்வாடிய பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கார் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர்.

குறித்தவிபத்துவெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாகவும், காரில் இருந்த மூவர் மாரவில ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் அனர்த்த நிவாரண அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹலவத்தையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த கார் கொஸ்வாடியா பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே பாரிய மரம் ஒன்று கார் மீது விழுந்து இந்த சோகம் சம்பவம் நிகந்துள்ளது.

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் ஏழு வயது மகள் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இதே போல் கடந்த சில நாள் களுக்கு முன்பு மோட்டார் சைக்கி ளில் சென்ற மூன்று பெண்கள் மரம் விழுந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# வாகரை மாங்கேணிக் கடலில் நீராடிய ஒருவர் சடலமாக மீட்பு

*மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள மாங்கேணி கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.*

*சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுடன் உயிரிழந்தவர் மாங்கேணியைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அச்சமூட்டும் எதிர்காலம்

எதிர்காலச் சந்ததி குறித்து அச்சமூட்டும் தகவல் ஒன்று ஆய்வு மூலம் வெளியாகி இருக்கின்றது. அபாயகரமான, உள்ளிருந்தே கொல்லும் நோயான இதன் மீது பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் தொண்டு நிறுவனங்களும் அதிகளவில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதமானோர் கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று வெளிப்படுத்தியிருக்கின்றது புதிய ஆய்வு.

தென் மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சிகரமான விவரம் தெரியவந்தது என்று விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கைப்பேசிப்பயன்பாட்டுக்குஅடிமையானவர்களில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக் கையைச்சரியானமுறையில்முன்னெடுப்பதில்லை என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் தெரிவித்தனர்.

கையடக்கத்தொலைபேசிகளுக்குஅடிமையான சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாகவும் தெரியவந்துள்ளது. அவர்கள் வன்முறையில் ஈடுபடும்வகையில்நடந்துகொள்கின்றனர்எனவும், பெற்றோரால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இது மட்டுமல்ல கடந்த ஆண்டு வெளியான ஒரு ஆய்வு முன்பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளில் 97 சதவீதம் குழந்தைகளின் கைகளில் கைப்பேசிகள் அல்லது திறன்பேசிகள், தொடுதிரை பேசிகள் பயன்பாடு காணப்படுகின்றது என்றும் இது அனுமதிக்கப்பட்ட ஒரு மணிநேரம் என்கிற அளவையும் தாண்டியதாக அமைந்திருக்கின்றது

இந்தப் போக்கு உடனடியாகக் கட்டுப்படுத்தப் படவேண்டும் என்கிறார்கள் நிபுணர்கள். இல்லாவிட்டால் நம் எதிர்காலச் சந்ததியினர் ஊனமுற்றவர்களாக மாறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

அவசியமாக இருந்தால் மட்டும் எந்தவொரு சிறுவர்களையும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கும் குறைவாக கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதிக் குமாறு பெற்றோரிடம் மருத்துவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். பெற்றோரும் சமூகமும் தமது எதிர்காலங்கள் மீது அக்கறையெடுத்துச் செயல்படவேண்டியது மிக மிக அவசியம்.

# மனக்கவலை மாற்றல் எளிது

கி.சேதுபதி



உடம்பும் உயிரும் ஒன்றி இயங்கும் உலகியல் நடைமுறையில், மனதால் வாழ நேர்ந்தவர்கள் மனிதர்கள் மட்டும்தான். அதுவரமா? சாபமா? என்று வரைமுறைப்படுத்தி உணர முடியாத அளவிற்குப்பிணைக் கப்பட்டிருக்கிறோம் நாம். உடம்புக்கு ஏதே னும் ஒன்று என்றால், ஓய்வு மருந்தாகும். மேலும் சிரமம் எனில், நேர்ந்தது இன்ன தென்று கண்டறிய, ஏராளமான கருவிகள் உண்டு. உண்டு தீர்த்துக்கொள்ள மருந்துகளும் உண்டு.

ஆனால், மனதுக்கு ஏதேனும் வந்துவிட்டால், அவ்வளவு விரைவாக அதனை அறிந்து கொள்ள முடிவதில்லை. அலுப்பு, சலிப்பு, சோர்வு, எரிச்சல், ஆத்திரம், கோபம் என அடுத்தடுத்த செயல்பாடுகளாக வெளிப்பட்டு விரக்தியில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. சோம்பல், தாமதம், மறதி அனைத்தையும் உடன்கொண்டுவந்து சேர்த்து, உடம்பையும் சோர்ந்து படுத்துவிடச் செய்கிறது. இல்லாத நோய்களையெல்லாம் இருப்பதாக நினைக்கத் தூண்டி அதுவே ஒரு நோயாகித் தாக்கிவிடுகிறது.

கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமியாக உள்ளுக்குள்நுழைந்துஎப்பேர்ப்பட்ட உறுதிப்பாடான நம்பிக்கையையும் சிதைத்து விடுகிற கவலை, நாம் கண்விழிக்குமுன்பேவிழித்துக்கொண்டுவிடுகிறது.

வேண்டுமேஎன்றுதேடவேண்டியபொருள்கள், வேண்டாம் என்று விட்டு வைத்த பிரச்சினைகள், வேண்டிய வேண்டாத வேலைகள் எல்லாம் வந்து சூழ்ந்து கொள்கிறபோது, தயக்கம் மடிவிரிக்கிறது; சுணக்கம் தோள் ஏறிக் கொள்கிறது; இயக்கம் தடைபடுகிறது; தூக்கம்போல் வந்து தொற்றிக் கொள்கிறது அசதி, வெயிலையோ, மழையையோ, வேறு காரணங்களையோ துணையாகக் கொண்டு தள்ளிப் போட்ட காரியங்கள் மீண்டெழுந்து வந்து, பின்னர் தூங்க முடியாதபடி செய்துவிடுகின்றன.

முன்பு விட்டுவைத்த வேலைகளின் மிச்சம் மீதியுடன் இன்று தொடங்கவேண்டிய பணிகளும் சேர்ந்து அழுத்தும்போது, இல்லாத தலைவலி இருப்பதாகத் தோன்றுகிறது. எல்லாமும் கவிந்து, கரையான் அரித்த புத்தகமாய், கவலை அரித்த மனது ஆகிவிடுகிறது.

தொடக்க நிலையில் தோன்றும் கவலையால் கவிகிற சோகம், மெல்லிய சுகம் போல் தெரியும். சிரங்கு வயப்பட்ட இடத்தைச் சொறிந்துவிடச் சுகம் போல் தெரிந்தாலும், அதுவே ரணமாவதுபோல், நம் மனதும் ரணகளம் ஆகிவிடுகிறது.

புற்றுக்குள் இருந்து புறப்படும் ஒற்றை ஈசல்போல, ஆழ் மனதுக்குள் படிந்திருக்கும் ஒரு சின்னக் கவலை மெல்லத் தலை தூக்கப் படிப்படியாய், எல்லாக் கவலைகளுக்கும் சிறகு கட்டிவிடுகின்றது. சிறகொடிந்த பறவையாய் மனம் இற்று வீழ்ந்துவிடுகிறது. இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள புகையையோ, போதையையோ, நாடிப் போனவர்களுக்கு அவற்றை நிறுத்த முடியாத தனிப் பெருங் கவலையும்கூட வந்து சேர்கிறது. தற்கொலைக்கும் தயார்படுத்திவிடுகிறது.

பெரிய கவலைகளைவிடவும், சின்னக் கவலைகள்தான் வந்து நம் மனதைத் தின்னத் தொடங்குகின்றன. நின்றுபோகும் மின்சாரம், மறந்துபோன கைக் குட்டை, எடுக்க மறந்த இரசீதுகள், விடுபட்ட கணக்குகள், செலுத்த வேண்டிய தவணைக் கட்டணங்கள் எல்லாமும் கூடி வந்து கொடுக்கும் நெருக்கடியில், பதற்றம் அதிகரிக்கிறது. படபடப்புத் தொடர்ந்துவர, நிதானம் தப்புகிறது. நமக்கே நமக்கென்றிருக்கும் தனிப்பட்ட கவலைகளும் இணைந்துகொள்ள, பாம்பு வாய் புகுந்த தவளையாய், கவலை வாய் புகுந்த மனது தவிக்கிறது.

வசதிவாய்ப்பற்றகாலங்களில்இருந்தநிம்மதிகூட, எல்லா வசதிகளும் வந்து நிரம்பிய இந்தக் காலத்தில் இல்லாதுபோன வருத்தம், எவரிடமும் சொல்லியழ முடியாத சோகம் மலிந்துவிடுகிறது.

இப்படி, கவலைப்படுவதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கின்றன. கவலைப்படாத மனிதர்கள் யார் இருக்கிறார்கள்? அவர்களுக்கு மத்தியில் கவலைப்படுகிற அவர்களுக்காக - நமக்காகக் கவலைப்படுகிற அருளாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவராக நின்று கவலை குறித்துக் கவலைப்படுகிற மகாகவி பாரதி, கவலையைக் களைவதற்கான வழியினைத் தேடுகிறார்.

கவலைக்கு மூலம் சென்றது கருதுதல். பின் அதையே சிந்தித்தல் என்று கண்டறிந்த பாரதி, சென்றது இனி மீளாது மூடரே' என்று சாடுகிறார். 'எப்போதும் சென்றதையே சிந்தை செய்து கொன்று அழிக்கும் கவலை என்னும் குழியில் விழுந்து குமையாதீர்' என்று எச்சரிக்கிறார். இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற எண்ணமதைத் திண்ண முற இசைத்துக் கொண்டு, தின்று விளையாடி இன்புற்று வாழுங்கள். தீமையெலாம் அழிந்துபோகும். திரும்பி வாரா' என்று உறுதி அளிக்கிறார்.

எல்லாம் இருந்தும் எளிய இன்பத்தைக்கூட அனுபவிக்கவிடாமல்செய்யும்சுவலையால்இனிய வாழ்வே நரகம் ஆகிவிடுகிறது. 'கவலைப்படுதலே கருநரகம்மா' என்கிற பாரதி, 'கவலையற்றுஇருத்தலே முக்தி' என்று கருத்தளிக்கிறார். முக்திப்பேறளிப்பது வீடு, ஆதலால், 'கவலை துறந்து இங்கு வாழ்வதே வீடு என்கிறார். தன்னலம் துறப்பதுபோல, தற்க வலையையும் துறக்கக் கற்க வேண் டும். தன்னலத்திற்குமாற்று, பொது நலம் ஆவதுபோல, தற்கவலைக்கு மாற்று, பொதுக்கவலை.

தனக்கான கவலைகளில் மூழ்கிய மனத்தைப் பிறர்க்கான கவலைகளில் செலுத்துகிறபோது, மன விரிவுகிடைக்கிறது. அதுபோக்கஉழைக்கவேண்டும் என்கிற ஊக்கம் பிறக்கிறது. அதுவே கவலைக்கு மாற்று மருந்தும் ஆகிறது.

கேவலம் உப்புக்கும் புளிக்கும் கவலைப்படுகிற மனத்தை விரித்து, உலகத்தாரின் கவலைகளில் கருத்தைச் செலுத்திய பாரதி, கரும்புத் தோட்டத்திலே கலங்கியழும் மனிதர்களுக்காக, உலகெலாம் துயருறும் மனித குலத்தின் விடுதலைக்காகப் பாட்டிசைக்கிறபோது, புதிய ஆற்றலைப் பெற்றுவிடுகிறார். வல்லமை தாராயோ, இந்த மாநிலம்பயனுறவாழ்வதற்கே' என்று பராசக்தியிடம் வரம் வேண்டுகிறார்.

மூலம் சென்றது கருதுதல்; பின் அதையே சிந்தித்தல் என்று கண்டறிந்த பாரதி, 'சென்றது இனி மீளாது மூடரே' என்று சாடுகிறார். 'எப்போதும் சென்றதையே சிந்தை செய்து, கொன்று அழிக்கும் கவலை என்னும் குழியில் விழுந்து குமையாதீர்' என்று எச்சரிக்கிறார்.

'என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று நின்னைச் சரணடைந்தேன்' என்று மகாகவி பாரதி அன்னையை வேண்டுகிறார். அன்னை என்று அவர் முன்னிறுத்துவது பிரபஞ்சப் பேராற்றல். துன்பங்களிலேயே கிடந்துழன்ற மனத்தை இயற்கையின்பால் செலுத்தி, உற்சாகம் கொண்டு விடுகிறார். நீலப் பெருங் கடல், பௌர்ணமி நிலவொளியில் பாற்கடலாய்த் தெரிய, 'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும் நேர்பட வைத்து ஆங்கே குலாவும் அமுதக் குழம்பைக் குடித்து ஒரு கோல வெறிபடைத்தேன் என்று பாடுகிறார்.

வெயில் அதிகம் என்று வெம்பியும் மழை மிகுதி என்று தேம்பியும் அழுகிற அவல மனிதர்களின் அற்பக் கவலைக்ளுக்கு முன்னர், நேற்றிருந்த வீடு இடிமின்னலுடன் கூடிய மழையால், நிமிடத்தில் நொறுங்கிவிழப் பார்த்த பாரதி, இன்று அங்கிருந்து இடம்மாறிவிடத் துணை நின்ற சூழலுக்குள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் வெசாக் பௌர்ணமி தின நிகழ்வு

## 55 படைப்பிரிவினருடன் இணைந்து நடத்தியது

கிளிநொச்சி கிளிநொச்சி வர்த்தக சங்கம், கிளிநகர் வாழ் மக்களுடன் இணைந்து 55 ஆவது படைப்பிரிவினரும் ஒழுங்கமைக்கப்பட்ட வெசாக் தின நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு 55 ஆவது படை முன்பாக சிறப்பாக நடைபெற்றது.

வெசாக் தினத்தை முன்னிட்டு இரவு உணவு அன்னதானம் வழங்கப்பட்டது. (05 - 113)





# மனக்கவலை மாற்றல் எளிது

4ம் பக்க தொடர்ச்சி..........

இறைமை கண்டு, காத்தருள் புரிந்த இயற்கையாம் காளியின் கருணையைப் போற்றுகின்றார். இடியோசைக்கு இயைந்த சந்தங்களைக் கொண்டு, மின்னலைத் தன் வலக்கரம் ஆக்கி கவிதை எழுதுகிறார். எழுத்துக்கு முந்திப் பிறக்கிறது பாட்டு, திக்குகள் எட்டும் சிதறிடத் தக்கத்தீம்தரிகிட தீம்தரிகிட' என்று தாளங்கள் கொட்டிக் கனைக்கும் வானத்தைக் கைவச மாக்கி மண்ணில் நிறுத்துகிறார். மறுநாள் பொழுதில் அழிந்தவை குறித்து, அனைவரும் கவலை வயப்பட்டு நிற்கின்ற நேரத்தில், 'பிழைத்த தென்னந்தோப்பின் பெருமிதம் பாடுகிறார்.

நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை என்று தெளிவுபடுத்திவிட்டு, எது அறிவு என்பதையும் அடையாளப்படுத்துகிறார். அது, 'தஞ்சமென்றேவையமெலாம் காக்கும் மகா சக்தி நல்லருளை ஐயமறப்பற்றல்' என்னும் அறிவாகி அவர்தம் கவிதையில் சுடர்கிறது. அந்த அறிவினால் ஆகும் பயன் யாது எனத் தெளிவாகச் சொல்கிறது திருக்குறள். பிறிதின் நோயைத் தன் நோயாகக் கருதுதல். அத்தோடு நிற்காது, அதற்கு மாற்றுத் தேடிக் கண்டுபிடித்து, ஆற்றவும் செய் கிறார்கள் அருளாளர்கள். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அனைத்துச் சமய அருளாளர்களும் அடிப்படையில் பட்ட கவலைகளும் கஷ்டங்களும், அவர்களுக்காக மட்டும்தானா, என்ன?

கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கடமையாற்றத் துணிவதே கவலை போக்கும் மருந்து எனக் கண்டு காட்டிய அவர்களின் வழியில், சென்ற நூற்றாண்டின் தலைவாசலில் நின்று தன் விதி சமைத்துக்கொள்கிறார் பாரதியார்.

தந்தையாகவும் குடும்பத் தலைவனாகவும் இருந்து ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்யவும் வழியற்றுப் புதுவையில் சிறைப்பட்டிருந்த காலத்தில் அது குறித்துக் கவலைகொள்ளும் மனதிற்குக் கட்டளையாக ஒரு கவிதை பாடுகிறார். 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்று மூன்று கடமைகளை முன்னுரைத்து, 'உமைக்கினிய மைந்தன் நம் குடியை வாழ் விப்பான் சிந்தையே இம்மூன்றும் செய் என்று முடிகிறது.

இதற்கெல்லாம் முன்னோடியாகத் திருவள்ளுவர், "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என்கிறார். எதிர்நிலையான இரு கருத் தாடல்களை முன்வைத்து, உடன்பாடான ஒரு கருத்தியலை நிலைநிறுத்துகிறது இக் குறள்.

உண்மையில் மனக்கவலை மாற்றல் எளிது என்பது திருவள்ளுவர் கண்டறிந்த தெளிந்த உண்மை. ஆனால், மாற்றுதற்கு அரிதாக ஆனதுயாரால்? நம்மால்தான். தன்னையும் சேர்த்துத் தாங்கும் பிரபஞ்சப் பேராற்றல் வயப்பட்டு, தற்கவலை போக்கிக்கொள்ளவும், பிறர் கவலை நீக்கிக் காக்கவும், முன்னோர்கள் காட்டிய வழியில், தன் மனதைச் செலுத்துவதே கவலையை மாற்றும் மருந்து எனச் சொல்லவும் வேண்டுமோ?



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு பல பணிகளை செய்தார் ரணில்

## சித்தார்த்தன் புகழாரம்




ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார் எனபுளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு வழங்கப்படும் இந்தக் கட்டடமானது வடக்குக்கு வழங்கப்படும் அபிவிருத்தியின் மற்றுமொரு உதாரணமாகவே நான் காண்கின்றேன்.

குறிப்பாககாணிவழங்கல்விவகாரம் தொடர்பில்வடக்குமக்களின்சார்பாக அவர் தீர்மானங்களை எடுத்தார்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் பிரதமராக இருந்தபோது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.-எனக்குறிப்பிட்டுள்ளார். (05)

# சந்நதி–கதிர்காம பாதயாத்திரை குழுவினர். திருகோணமலை புல்மோட்டை வந்தடைவு









(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்

யான சந்நிதி- கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி தலைமையிலான குழுவினர் 12 நாள்களின் பின்னர் வெள்ளிக்கிழமை கொக்கிளாயை அடைந்தனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருதினங்கள்தங்கியிருந்து சற்று ஓய்வெடுத்து பின்னர் மீண்டும் செவ்வாய்க்கிழமை யாத்திரையை ஆரம்பித்தார்கள்.

பாதயாத்திரைக் குழுவினர் கொக்கிளாய் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டையில் பிரவேசிக்க உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை (11) இலங்கையின்மிகநீண்டபாதயாத்திரை

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City


எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

## பெண்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் எவரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## இன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமூகநீதிக்கான தேசிய இயக்கம் அதன் ஆரம்பத்திலிருந்து மறைந்த மாதுலுவாவே சோபித்த தேரரின் செயற்பாடுகளான தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்காக ஈடுபட்டு வருகிறது.

எவ்வாறாயினும், அந்தப் பயணத்தில் ஒரு தேசமாக, இலக்குகளை அடையவதற்கு நாம் இதுவரை தவறிவிட்டோம் என்பதை அங்கீகரிக்கிறோம், அதுவே தற்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு காரணமாகியுள்ளது.

வரலாற்றைப் பார்க்கையில், 1948இல் பிரித்தானியப் பேரரசில் இருந்து எமது நாடு சுதந்திரம் அடைந்தமைக்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் உட்பட அனைத்து இனத்தலைவர்களின் கூட்டு முயற்சியே காரணமாக இருந்தது.

அவர்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியே நாட்டின் சுதந்திரம் என்பதை நினைவுகூருகின்றோம். துரதிர்ஷ்டவசமாக, பிளவுபடுத்தும் இன மற்றும் மத போக்குகள் உட்பட அடுத்தடுத்து நிகழ்ந்தேறிய விடயங்கள் இந்த ஒற்றுமையை சிதைத்து விட்டன. தற்போதைய நிலைமையில் நாட்டின் அனைத்து நிலைமைகளும் எதிர்கால சந்ததியினர் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

எனவே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும் சர்ச்சைக்குரிய காணிப் பிரச்சினையை உத்தேச காணி ஆணைக்குழுவின் ஊடாக தாமதமின்றி தீர்க்கவும் அக்கறையுடன் பரிசீலிக்குமாறு அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

மேலும், பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பாக வடக்கில் உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படையான மற்றும் நேர்மையான கலந்துரையாடல்களை தாமதமின்றி முன்னெடுக்குமாறும் நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் தேசத்தின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவது மிகவும் முக்கியமானதாகும்.

உலகத்தமிழர் பேரவையின் ஊடாக மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடையே மேம்படுத்தப்பட்ட உறவுகளையும் நேர்மறையான முன்னேற்றங்களை நாங்கள் ஏற்றுக்கொண்டு பாராட்டுகிறோம்.

தேசியரீதியாக கூட்டாக நாம் அர்ப்பணிப்புடனும் ஒத்துழைப்புக்களுடனும் முன்னெடுக்கும் செயற்பாடுகள் பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை அளிக்கின்றன.

அடுத்த தேர்தலை நாம் நெருங்கும் போது, அனைத்து பங்குதாரர்களும் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு உணர்வோடு ஒன்று சேருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த ஒன்றிணைவானது முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அதன் மூலம், எதிர்கால சந்ததியினருக்கு வளமான இலங்கையை பரிசை வழங்க முடியும் என்றுள்ளது.

## பொருந்தோட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றபோது அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உறுமய' திட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுகிறது. ஜனாதிபதியின் 45 வருட சேவையை 5 நிமிடங்களில் சுருக்கிச் சொல்லமுடியாது. வட.மாகாணத்தில் பெண்கள் எப்படி பாதுகாப்பாக வாழ்ந்தனர் என்று அறிவோம். அதனால் அடுத்த மாதங்களில் பெண்கள் பாதுகாப்புக்கான சட்டங்களை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி கூறுவது சிறந்த விடயமாகும்.

அதனால் நாடளாவிய ரீதியிலிருக்கும் பெண்கள் அனைவரும் பாதுகாப்புப் பெறுவர். மொழிப் பிரச்சினையால் அதிகாரிகளிடம் பெண்களின் பிரச்சினைகளை விளக்கமாக கூற முடியாத நிலை இருந்தது. அச்சமின்றி பெண்கள் எல்லா இடங்களுக்கும் செல்லக்கூடிய நிலையை ஜனாதிபதி உருவாக்குவார் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ் மக்களின் காணி விடுவிப்பு பிரச்சிணைக்கு ஜனாதிபதி தீர்வை வலியுறுத்தினார். அதேபோல் காணி உறுதிகளையும் வழங்குகிறார். அதனால்தான் அவர் சரவதேச ரீதியாக மதிக்கப்படுகிறார் - என்றார்.

## ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவர்களுக்காக பணியாற்ற தாம் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெறாத மஹிந்த ராஜபக்சதான் தமிழர்களுக்காக தொடர்ந்தும் பணியாற்றினார். நாம் ஒரு தேசத்தையே நம்புகின்றோம் அங்கு தமிழர் சிங்களவர் மலேயர், பறங்கியர் என்ற பேதங்களை நாம் பார்க்கவில்லை.

நாட்டுப்பிரஜைகளின் அபிவிருத்தியையே நாம் கவனத்தில் கொள்கின்றோம். அதனை தொடர்ந்தும் முன்னெடுப்போம். விசேடமாக தமிழ் முஸ்லிம் இளைஞர்களிடத்தில் நான் ஒரு விடத்தினைக் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் மூத்தவர்களிடத்தில் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தினை எடுத்துக்கொள்ளுங்கள் - என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகவே அதிகமான கடிதங்களை எழுதுகின்றனர். தற்பொது உங்களின் காணிப் பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி நேரடியாக வந்து தந்துள்ளார். இன்று அந்தக் காணிகளை உங்களுக்கே உரித்தாகிறது. இனிமேல் அரச அலுவலங்களுக்குச் செல்லத் தேவையில்லை.

இந்த மாவட்டத்தில் 45 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. 21 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு காணி உரிமைகளை வழங்க வேண்டும் என்று அரச அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். காணி இல்லாத ஆயிரம் குடும்பங்கள் இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கும் காணிகளை வழங்குவது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி பணிப்புரைவிடுத்துள்ளார்.

இளைஞர்களுக்கு விவசாயம் செய்வதற்காக காணிகளை வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார். உங்களின் முன்னோர்கள் காணிகளைப் பெறுவதற்காக போராடியிருப்பார்கள். தற்போது இந்தப் பிரச்சினையை ஜனாதிபதி தீர்த்துவைத்துள்ளார். யாழ் மாவட்டத்தில் நேற்று 1200 காணி உறுதிகள் வழங்கப்பட்டன. இன்று கிளிநொச்சியிலும், நாளை முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

பூநகரி பகுதியில் 500 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது. குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் திருத்தப்பட்டு, பயிர்ச் செய்கையை ஊக்கவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 4.5 மில்லியன் ரூபா பெறுமதியில் 32 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி பணிப்புரைவிடுத்துள்ளார். இந்த வீடுகளை நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

280 மில்லியன் ரூபா இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, வடக்கில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேபோன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் வட மாகாணத்தில் ஆரம்பிக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். குடிநீர், சுகாதாரம், கல்வி, காணி உரிமை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தீர்வு வழங்கி வருகிறார். இதற்கு நன்றியுடையவர்களாக வடக்கு மக்கள் இருக்க வேண்டும் என்றார்.

## ஆளும்தரப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்று அவதானம் செலுத்தப்படும்.

தற்போது மக்களுக்குக் காணி உறுதிப்பத்திரங்களைவழங்க இங்கு கூடியுள்ளோம். இந்த உறுதிகளை வழங்க முன்னர் மாகாண ஆளுநர்களின் அனுமதியைப் பெற்றுக்கொண்டோம்.

வெள்ளையர்கள் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் இந்த காணிகள் வழங்கப்படுகின்றன. வெள்ளையர்கள் இந்தக் காணிகளைப் பாதுகாத்தனர். நீங்களும் இந்தக் காணிகளைப் பாதுக்கவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்ற குழுக்கும் பணிப்புரை விடுக்கவுள்ளேன். உண்மையில் இந்த காணி உரிமைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எமது விவசாயிகள் அரிசியல் தன்னிறைவு அடைந்த நாட்டை உருவாக்கியுள்ளார்கள்.

2003ஆம் ஆண்டு நான் பிரதமாக இருந்தபோது அரிசியில் தன்னிறைவு அடைந்தோம். அதற்கு முன்னர் இந்த நிலைமை இருக்கவில்லை. அப்போது வன்னிப் பிரதேசம் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் உரம் அனுப்புவது குறித்து ஆராய்ந்தோம். உரத்தைப் பயன்படுத்தி ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடும் என்ற அச்சம் இருந்தது. இதுகுறித்து உயர் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்திற்கு உரத்தை வழங்கினோம். அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததில் வன்னி, அநுராதபுரம், பொலன்னறுவ மாவட்டங்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

தற்போது சிலருக்குக் காணி உரிமை கிடைத்துள்ளது. விவசாயக் காணி உரிமை கிடைக்கிறது. நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதனைப் பயன்படுத்தி, போட்டித் தன்மைமிக்க விவசாயத்துறையை ஏற்படுத்தமுடியும் என்று நம்புகிறேன்.

இதன் மூலம் விவசாயத்துறை வளர்ச்சி பெறும். உலக சனத் தொகையும் அதிகரித்து வருகிறது. இதன் மூலம் அதிகரித்துவரும் சனத் தொகைக்கு எங்களுக்கு உணவளிக்க முடியும். தற்போது நாம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தில் வன்னிக்கு மிகப் பெரிய வகிபாகம் இருக்கிறது.

உங்களின் காணிகளை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். போரினால் காணிகளை இழந்தவர்கள் பெரும்பாலானோர் இருக்கின்றனர். தற்போது கிடைக்கும் காணிகளை இழந்துவிடக் கூடாது.

நீங்கள் இந்தக் காணிகளில் விவசாயம் செய்து. வீடுகளைக்கட்டி அவற்றை உங்களுக்குப் பின்னர் உங்கள் பிள்ளைகளுக்கு வழங்குகள். இந்தப் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. இதனை நீங்கள் செய்ய வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப செயலகம் என்பவரால் தீர்வு கிட்டுமா?

## ஊடக சந்திப்பில் ஜெயசிறில் பதிலடி




(வி.ரி.சகாதேவராஜா)

அரச வர்த்தமானியால் பிரகடனம் செய்யப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகம்என்றுகூறுபவரால்தீர்வுகிட்டுமா? இவர்களை தமிழ் முஸ்லிம் மக்கள் இன்னமும் நம்புகிறீர்களா?

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் காரைதீவு பிரதேச முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறினார்.

நாடாளுமன்றத்தில்அம்பாறைமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் ஆற்றிய உரைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இவர் மேற்படி கருத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காரைதீவில் 65 வீதம் 12 கிராம சேவக பிரிவில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு 20 லட்சம் ரூபாவும், 35 வீதம் 5 கிராம சேவக பிரிவில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு 46 லட்சம் ரூபாவும் இவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இருந்தே தெளிவாக விளங்குகின்றது. காரைதீவுஒருங்கிணைப்புகுழுதலைவர்நாடாளுமன்ற உறுப்பினர்முஷாரப்தமிழ்மக்களுக்குமிக அநியாயம் செய்துகொண்டிருக்கின்றார் என்பது.

தமிழ் முஸ்லீம் இன முரண்பாடுகள் வருவதற்கு காரணம் இவ்வாறான அரசியல்வாதிகளால் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு கூடுதலாக நிதிஒதுக்கியும் தமிழர்களுக்கு குறைவாக ஒதுக்குவதும் பிணக்குகள் வரக் காரணமாக இருக்கிறது.

காரைதீவிலும் நாவிதன் வெளியிலும் பாரிய புறக்கணிப்பை செய்திருந்தார். கல்முனை வடக்கில் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தை கூட்டவில்லை.

அங்கால பக்கம் போகவுமில்லை. அமைச்சரவை அங்கீகரித்த பிரதேச செயலகம் என்ற அந்தஸ்தை பொய்யாக்கி அதுவொரு உப பிரதேச செயலகம் என்கிறார். அப்படிப்பட்டவரிடம் எம்மவர்கள் மகஜர் கொடுத்து ஜால்ரா அடிக்கிறார்கள்.

இனிமேலாவது தமிழ் பிரதேச செயலகங்களுக்கு இவ்வாறு இனரீதியாக இனவாதிகளாக செயற்படுகின்ற ஒருங்கிணைப்பு தலைவர்களை அரசாங்கம் அல்லது இந்தநாட்டினுடையஅமைச்சர்கள்நியமிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓர் இனத்தை அடிமையாக்கும் சிந்தனையில் செயற்படும் இனவாதி இவரைப் போன்றவர்களை சகோதர முஸ்லிம்களே புறக்கணிக்க வேண்டும். தமிழ் முஸ்லிம் இனத்தவர்களை நல்லிணக்கத்துக்கு பங்கம் விளைவிப்பவர்கள் இவ்வாறான செயற்பாட்டையும் அவருடைய கருத்துக்களையும் வன்மையாக கண்டிக்கின்றேன்.29 கிராம சேவக பிரிவை கொண்ட ஒருபிரதேசசெயலகத்தைதரம்உயர்த்தவிடமாட்டேன் என்ற கருத்தையும் தரம் உயர்த்தப்பட்டதையும் மறைக்கும் நிர்வாக கடமைக்கு தடைபோடும் இவ்வாறானவர் எவ்வாறு எமது தமிழ் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் ஆக ஏற்றுக் கொள்வது?

உணர்வு உள்ளவர்கள் அனைவரும் இவ்வாறானவர்களை புறக்கணிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். இனங்களை பகடைக்காயாக பயன்படுத்தி தனக்கு ஓர் அரசியல் இருப்பை தக்க வைப்பதற்காகவே இந்த நாடகம். தேர்தலுக்காக ஆசனம் வழங்கிய கட்சியையும் தலைமையையும் புறந்தள்ளியவர் தனக்கான அதிகாரத்தை பெறுவதற்காக எவ்வாறான செயல்பாடுகளையும் செய்ய முனைவார். இவர்களை யாரும் நம்ப வேண்டாம். - என்றார்.(05)

# களுத்துறை போதி விகாரைக்கு சென்ற பெண்ணைக் காணோம்

களுத்துறை போதி விகாரைக்குச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில்விசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த தரங்கி நிலுஷா என்ற 25 வயதுபெண்ணொருவரேஇவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர் கடந்த 22 ஆம் திகதி காலை உறவினர்களுடன் இணைந்துகளுத்துறைபோதிவிகாரைக்குச் சென்றுள்ள நிலையில் அங்கு இவர் தனது 2 வயது குழந்தையை உறவினரொருவரிடம் கொடுத்துவிட்டுமலசலக்கூடத்துக்குச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், இவர் நீண்ட நேரமாகியும் மீண்டும் திரும்பி வராததால் உறவினர்கள் அனைவரும் இவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், காணாமல் போன பெண்ணின் தந்தை இது தொடர்பில் அவரது கணவரிடம் தெரிவித்ததையடுத்து இந்தப் பெண்ணின்கணவர்இதுதொடர்பில் பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு அளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் 5 அடி உயரம் உடையவர் என்பதுடன் சம்பவத்தின்போதுஇவர்நீலநிறகாற்சட்டையும் வெள்ளைநிறசட்டையும் அணிந்திருந்தார்எனமுறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# புத்தளம் எலுவாங்குளத்தில் முதலையால் மக்கள் அச்சம்

புத்தளம் எலுவாங்குளம் பிரதேசத்தில் தாமரைக்குளத்தில் தற்பொழுது அதிகளவிலான முதலைகள் சஞ்சரிப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

குறித்த முதலைகள் ஆடு மாடுகளைத் தொடர்ந்தும் வேட்டையாடுவதாகவும் இதனால் தாம் பெரிதும்பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன்போது குறித்த குளத்தில் முதலைகள் சஞ்சரிப்பதாக எந்த ஒரு பதாதைகளும் காட்சிப்படுத்தப்படவில்லையென்றும்அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வெளிப் பிரதேசங்களில் இருந்தும் அதிகளவிலான மக்கள் குறித்த குளத்தில் வான் பாயும் பகுதிக்கு குளிப்பதற்கு வருகை தருகின்றனர்.

மக்கள் குறித்த பகுதியில் குளிப்பதற்குபாதுகாப்புவலைகளை அமைத்துத் தருமாறு குறித்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(05)

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கட்டமைப்புக்களை சீரமைக்கும் பணிகளை ஹரீஸ் பார்வையிட்டார்



(நூருல் ஹுதா உமர்)

இவ்வருட ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டம் பலத்த வெள்ளப்பெருக்கை சந்தித்து விவசாய நீர்ப்பாசன கால்வாய்கள், அணைக்கட்டுகள் பாரிய சேதத்தை சந்தித்தது. இந்த விடயத்தை ஜனாதிபதி, விவசாய அமைச்சர், நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோரை சந்தித்து நாடாளுமன்றஉறுப்பினர்சட்டத்தரணிஎச்.எம்.எம். ஹரீஸ் விளக்கிஅசௌகரியத்திற்குள்ளாகியுள்ளவிவசாயிகளின் நன்மை கருதி உடனடியாக அணைக்கட்டுக்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார்.

அது தொடர்பில் முன்னேற்றங்கள் பற்றி ஆராயும்



களவிஜயமொன்றை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் மேற்கொண்டு சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் வேல் கஜனிடம் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், வீரையடி, செங்கல்பட்டு அணைகளின் நிலைகள் மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஏனைய அணைகளின் நிலைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் அதிகமாக பாதிக்கப்பட்ட அணைகளை நீர்ப்பாசன திணைக்களம் 90 சதவீதமளவில் சீரமைத்துள்ள விடயங்களையும் பார்வையிட்டார்.

இன்னும் மீதமாக உள்ள வேலைகளை அவசரமாக முன்னெடுக்கத் தேவையான நிதியை நீர்ப்பாசன



அமைச்சரிடம் பேசி பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும், சம்மாந்துறை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் முன்வைத்த விவசாயிகளின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்க விவசாய அமைச்சருடனும், பொறுப்புவாய்ந்த அமைச்சின் அதிகாரிகளுடனும் பேசி உடனடி நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உறுதியளித்தார்.

இந்த கள விஜயத்தில் கிராம உத்தியோகத்தர் ஏ.எல். தஸ்லீம், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ. பாவா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05)

# விளையாட்டு கழகத்தின் புதிய சீருடை அறிமுகம்




(எம். எப்.றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மார்க்ஸ்மேன்







விளையாட்டுக் கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான மேலங்கி அறிமுக நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமைஇடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் றிஷாட் ஏ காதர் தலைமையில் அட்டாளைச்சேனை ஹனீபா ஹாஜியார் விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில்விளையாட்டுகழகங்களின் வளர்ச்சியில் பல்வேறுபட்ட ஆலோசனைகளை வழங்கிய ஓய்வு பெற்ற மாவட்ட மெய்வ வல்லுநர் பயிற்றுவிப்பாளர் எஸ். எல். தாஜுதீனின்சேவையைபாராட்டியும், பிரதமஅதிதிஅம்பாறைமாவட்டத்தில் விளையாட்டு கழகங்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காகவும், சமூக சேவைக்காவும் கழகத்தின் சார்பில் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்த்துக்கொள்வதற்கு ஒன்றிணைவோம்

## 28ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு லட்சம் குறுஞ்செய்தி அனுப்பல்

(எச் எம் ஹலால்தீன்)

அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாட்டினை தீர்த்துக்கொள்வதற்கு,உடனடியாக தலையீட்டினை மேற்கொள்ளுமாறு இலங்கையின் அனைத்து அதிபர் - ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனாக்களின் ஆசிரியர்கள் எதிர்வரும் மே மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு லட்சம் வட்செப் குருஞ்செய்தியை அனுப்பும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அதிபர்-ஆசிரியர் சம்பள முரண்பாட்டிற்கு எதிரான தேசிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இதனூடாகசம்பளமுரண்பாட்டின்மீதமாகவுள்ள 2/3 பகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் சிமாட் போராட்டத்தினை மென்மேலும் வலுப்புடுத்துவதற்கு ஜனாதிபதியின் கவனத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பது ஒன்றியத்தின் எதிர்பார்ப்பாகும். அதிபர் -ஆசிரியர் சம்பள முரண்பாட்டினை தீர்த்துக்கொள்வதற்காக அதிபர்-ஆசிரியர் சம்பள முரண்பாட்டிற்கு எதிரான தேசிய ஒன்றியத்தின் எதிர்கால நடவடிக்கையினை, எதிர்வரும் 27 ஆம் திகதி பெரும்பாலான தொழிற்சங்கங்களின் பங்குபற்றுதலோடு ஒன்றிணைந்த பிரேரனணயின் மூலம் முன்வைப்பதற்கு இவ்வமைப்புதயாராக உள்ளது.

அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாட்டினை தீர்த்துக்கொள்வதற்கு அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்படும் பயன்மிக்க செயற்பாடுகளுக்கு எதுவித நிபந்தனைகளுமின்றி அதிபர் - ஆசிரியர்கள் அனைவரும்ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(05)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்



(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைபுனரமைப்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை சம்மாந்துறை விளினியடி கிராமம் 02 இல் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்பிரதித்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ. மன்சூர் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமா லெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், அரசியல் அதி உயர்பீட உறுப்பினர் சட்டத்தரணி சஃபிர், சம்மாந்துறை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ். நளீர் அட்டாளைச்சேனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல். நஸீர் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# அலிகம்பை பிரதேசத்தில் தொண்டு நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டம் சுகாதாரத்துறையிடம்



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், அலிகம்பே பிரதேசத்தில் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றால் சுமார் 25 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் ஒன்று அப்பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்காக சுகாதார திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்லத கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், அலிகம்பைகத்தோலிக்க தேவாலய அருட்தந்தை எஸ்.ஜெகநாதன், பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகளான வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி பீ.அகிலன், பனங்காடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் யூ.எல்.எம்.சக்கீல் மற்றும் தொண்டு நிறுவனத்தினர் உள்ளிட்ட அப்பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அலிகம்பை பிரதேசத்தில் சுமார் 350 குடும்பங்கள் உள்ளன. போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளின்றி மிகவும் கஷ்டத்துடன் அங்குள்ள மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் அங்கு பனங்காடு வைத்தியசாலையினால் வாரத்தில் மூன்று நாள்கள் கிளினிக் நடத்தப்பட்டு வருகிறது. ஏனைய நாள்களில் அங்குள்ள மக்கள் அம்பாறை மற்றும் அக்கரைப்பற்று போன்ற தூரப் பிரதேச வைத்தியசாலைகளுக்குச் சென்றே சுகாதார சேவையினைப் பெற்று வருகின்றனர்.

அலிகம்பைகத்தோலிக்கதேவாலய அருட்தந்தை எஸ்.ஜெகநாதன், மற்றும் அங்குள்ள பொது நிறுவனங்கள் நிரந்தரமான வைத்தியசாலை ஒன்றினை அப்பிரதேசத்தில் நிர்மாணித்து தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்தும் வருகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் தொண்டு நிறுவனம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட கட்டிடம் ஒன்றும் அதற்குரிய தளபாடங்களும் சுகாதார திணைக்களத்திற்கு



கிடைத்திருப்பது எதிர்காலத்தில் அங்கு நிரந்தரமான வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்கு பெரும் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

அலிகம்பை பிரதேசத்தில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலன் கருதி கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் எதிர்வரும் காலங்களில் வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத் தக்கது.(05)

# தனியார் வைத்தியசாலை ஒன்றில் கொள்ளுப்பிட்டியவில் தீ பரவல்

கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வெள்ளிக்கிழமை தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் மூன்றாவது மாடியில் தீ பரவியதன் காரணமாக கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புத் துறைக்குத் தகவல் வழங்கப்பட்டது .

பின்னர், இரண்டு தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டன எனவும், தீ முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் கொழும்பு மாநகரசபையின் தீயணைப்புபிரிவினர் தெரிவித்தனர்.

இந்த தீ பரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# யாழ் இந்துக் கல்லூரி மாணவனின் சாதனை



யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் துஸ்யந்தன் பிரசாந்தன் என்பவர் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் சாதித்ததன் ஊடாக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இதனடிப்படையில், மூலக்கூறு உயிரியல் பாடத்திற்கு தெரிவாகியிருந்த பிரசாந்தன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேசிய மட்ட சாதனையாளர்கள் நேர்முகத்தேர்வின் பின்னர் ஊவா வெல்லச மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத் தெரிவிற்காக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களிலும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கு இசற் புள்ளி கணிக்கப்படுகிறது.

எனினும், மாணவர் ஒருவர் இணைப்பாடவிதானத்தில் வெளிப்படுத்தியதிறமைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலதிக இசற் புள்ளிகளை வழங்கி அவர்களுக்குமேலதிகவாய்ப்பை வழங்கி வருகிறது.

இந்த நிலையில், 2022 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 99 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்குத்தெரிவாகியுள்ளதோடு இருவர்விசேடவகையில்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், குறித்த பாடசாலையின் க.பொ.த உயர்தரம் 2022 உயிரியல் பிரிவு மாணவனுக்கு மருத்துவ பீடம் (ஊவா வெல்லச பல்கலைக் கழகம்) செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், நேர்முகத்தேர்வில் உயர்தரக் காலப்பகுதியில் பெற்ற அடைவுகள் பிரதானமாக கொள்ளப் பட்டாலும் பாடசாலைக்கால அடைவுகள் அனைத்தும் கருத்திற்கொண்டு நோக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## கோப்பாய் பகுதியில் கசிப்பு விற்பனை

### பெண் கைது



யாழ்ப்பாணம்-கோப்பாய் பொலிஸ் பிரிவு உட்பட்ட செல்வபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

24 ஆம் திகதி போயா தினமான மதுபானசாலைகள் மூடப்பட்ட நிலையில் கசிப்பு வியாபாரத்தில் பெண் ஒருவர் ஈடுபடுகிறார் எனப் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்(05)

## களுத்துறையில் துப்பாக்கிச் சூடு

### மூவர் கைது

களுத்துறை,கட்டுகுருந்த பிரதேசத்தில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் களுத்துறை தெற்கு பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் பெலபிட்டியாகொட, நுகேகொடை ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெபுவன மற்றும் மொரந்துடுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 39 மற்றும் 41 வயதுடைய மூன்று நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 56 துப்பாக்கி, 4 தோட்டாக்கள், ஒரு கிலோ கேரளா கஞ்சா, 340,000 ரூபா பணம் மற்றும் கார் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு மேற்கொண்டு வருகின்றனர்.

களுத்துறை, கட்டுகுருந்த பிரதேசத்தில் கடந்த 20 ஆம் திகதி அன்று மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த நபரொருவரை சுட்டுக் கொலை செய்து தப்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.05.2024இல் வெளியிடப்பெற்றது